31 ஆடி
ஜூலை - செப்டம்பர் 2019

மலர் 8 இதழ் 3

KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 100

# காவ்யா தமிழ்

கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்



இயக்குநர் மகேந்திரனின்
உதிராப் பூ



சண்முகசுந்தரத்தின்
தோப்பில் ஒரு
தனிமரம்



கிரீஷ் கர்னாடின்
நாகமண்டலம் [நாடகம்]





கவிப்பேரரசுவின்
கருஞ்சூரியன் பெரியார்

சினிமா அரசியல் சினிமா
வீரபாண்டிய கட்டபொம்மன்

சுந்தரபாண்டியனின்
புத்தரின் புன்னகை
[சிறுகதை]

வைரமுத்து
தமிழாற்றுப்படை
[கவிதை]

அட்டக்கத்தி
பா.ரஞ்சித்

ஓ.முத்தையா பேட்டி!
ஞானி,
ஞானசேகரன்,
விக்கிரமாதித்யன்,
நரேந்திரகுமார்
மற்றும் சில கட்டுரைகள்





# தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் தொழில் மற்றும் பண்பாட்டுக் கலைஞர்கள் குறித்த பதிவுகள்

முனைவர். ச. சீனிவாசன்

உலகத்திலுள்ள ஒவ்வொரு சாதிமற்றும் இனத்தைப் பற்றிச் சமூக மானிடவியல், இனவரலாறு மற்றும் வழக்காற்றியல் ஆய்வுகள் நிகழ்த்த வேண்டியது இன்றைய காலகட்டத்தின் மிகத் தேவையான ஒன்றாக உள்ளது. மேட்டுக்குடி சமூகம் முதல் அடித்தட்டுச் சமூகம் வரைத் தங்கள் வரலாற்றை, இலக்கியங்கள், இதிகாசங்கள், புராணங்கள், கல்வெட்டுக்கள், வாய்மொழி வரலாறு வழிக் கட்டமைத்தலிலும் தக்கவைத்துக்கொள்வதிலும் ஆர்வம் கொண்டுள்ளன. அதை அடுத்த தலைமுறையினர்க்கும் எடுத்துச் செல்வதிலும் முனைப்புடன் செயல்படுகின்றன.

ஏற்கனவே எழுதப்பட்ட வரலாறு என்பது பெரும்பாலும் அரசர் மற்றும் ஆதிக்க சாதித் தலைவர்களின் வரலாறாகவே இருக்கிறது. தற்பொழுது எழுத்து வடிவில் இருக்கும் வரலாறு மிகுதியும் மேல்தட்டு வர்க்கத்தினரால் எழுதப்பட்டிருப்பதுடன் மேட்டிமைப் பார்வையுடன் / அணுகலுடன் எழுதப்பட்டுள்ளது. 'கீழ்த்தட்டு மக்களின் வரலாறுதான் உண்மையான மக்களின் வரலாறாக இருக்க முடியும் என்றும்; அதைத் தவிர்த்து அரசர்களின் வரலாறு கற்பிக்கப்பட்டது, தவறானது' என்கிறார் வெ.பன்னீர் செல்வம் *(2008: 1)*.

## அடித்தளத்திலிருந்து எழுகின்ற வரலாறு :

இன்றைய காலகட்டத்தில் வரலாற்றை அடித்தளத்திலிருந்து (Historyfrom below) எழுதவேண்டும் என்று வரலாற்று அறிஞர்களும் சமூகவியல் அறிஞர்களும் கூறிவருகின்றனர். எழுதப்பட்ட வரலாற்றிலும் குறிப்பாகஅடித்தள (Subaltern), விளிம்புநிலை (Periphery) மக்களின்

தமிழ் இணைப்பேராசிரியர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி, (தில்லிப் பல்கலைக்கழகம்), புது தில்லி -110 021.